மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய தேசிய லீக்கினுடைய தலைவர், அப்துல் லத்தீப் அவர்கள் சொல்கிற சட்டம், தடா சட்டம் அல்ல. தடா சட்டம் இப்போது இல்லை. தடா சட்டம் திரும்பப் பெறப்பட்டுவிட்டது. ஆனாலும், ஏற்கெனவே தடா சட்டத்தின்படிக் கைது செய்யப்பட்டவர்கள் மேல் உள்ள வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இப்போது குறிப்பிடுவது Prevention of Terrorists Act, அதாவது POTA என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்ற சட்டமாகும்.

அது இந்த அவையிலே கொண்டுவரப்பட்டு, அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டபோது, அவையிலே பெரும்பாலான உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உட்பட அனைவருமே அந்தச் சட்டம் அப்போது தேவை என்ற அளவுக்கு எடுத்துரைத்திருக்கின்றார்கள். ஏனென்றால், கோயம்புத்தூரிலே நடைபெற்ற தொடர் குண்டிவெடிப்பு, பலர் மாண்ட நிகழ்ச்சி, அதையொட்டி தீவிரவாதத்தைத் தடுக்கவேண்டும் என்பதற்காக அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. தடா சட்டத்தையே ஏற்றுக்கொள்ளாத முற்போக்குவாதிகள், ஏன், திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட, இந்த 'பொடா' சட்டத்தைக் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை நாட்டுமக்கள் அனைவரும் நன்றாக உணர்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் உணர்வார்கள்.

முற்பகல் 11-30

தீவிரவாதத் தடுப்புச் சட்டம் என்று தமிழிலே அதற்குப் பெயர். இதை, குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொல்கிறார்கள். அதுவல்ல. அது குடியரசுத் தலைவர் அவர்களுடைய பார்வைக்குச் செல்வதற்கு முன்பே மத்திய அரசினுடைய உள்துறையிலிருந்து அது நமக்கு அனுப்பப்பட்டு, சில விளக்கங்களைக் கோரியிருந்தார்கள், சில clarification— களைக் கேட்டிருந்தார்கள். கேட்கப்பட்ட நாள், 1998, 10-வது மாதம் என்று கருதுகிறேன். 16 அல்லது 17 ஆம் தேதி, 10/98-ல், அது இங்கே திருப்பி அனுப்பப்பட்டு— தேவையில்லை என்ற எண்ணத்தோடு திருப்பி அனுப்பப்படவில்லை அதிலே சில விளக்கங்கள் கோரப்பட்டிருந்தன. நாட்டிலே உள்ள நிலை, கட்சிகளுடைய கருத்துகள் ஒரளவுக்கு அமைதியான சூழ்நிலை திரும்புகின்ற கால கட்டம். எனவே, அவர்கள் விளக்கம் கேட்டதைச்

சாக்காக வைத்துக்கொண்டு, அதற்கு இங்கேயே ஒரு கமிட்டியைப் போட்டு விட்டோம்.

இங்கே நம்முடைய உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னாரே, 'கமிட்டியைப் போடு, இல்லாவிட்டால் தள்ளிப்போடு' என்று. அதைப்போல, ஒரு கமிட்டியை, சட்ட அமைச்சருடைய தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டு, 'இதை ஆராய்ந்து சொல்லுக' என்று சொல்லியிருக்கிறோம். அது ஆராய்ந்து சொல்லப்பட்ட பிறகுகூட, நான் இப்போது இந்த அவைக்கு உறுதியளிக்கின்றேன், இந்த POTA சட்டம் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் போன்றவர்கள் இங்கே எடுத்துக் கூறியதைப்போல, மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும், இங்கே எடுத்துக் கூறியதற்கொப்ப, அது Select Committee -க்கு நிச்சயமாக அனுப்பப்படும். உடனடியாக நடைமுறைக்கு வராது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தக் காலத்திலே 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார். அந்த அளவிலே,

'கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.'

என்ற அந்தக் குறளுக்கேற்ப, நீண்டநாள் செல்வாக்கோடு இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள், கையை ஓங்கி மெதுவாக அடிக்க வேண்டும். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று இருக்கிறது. அப்படி கடிதோச்சப்பட்டதுதான் POTA சட்டம், இப்போது மெல்ல எறிகிற கட்டத்திற்கு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதோடு, அவர்கள் இருக்கக்கூடிய இந்த ஆட்சியிலே நம்முடைய தலைவர்களுக்கு இருக்கக்கூடிய நல்ல எண்ணத்தை அன்று மட்டுமல்ல, என்றும் புரிந்து கொண்டவர்கள் நாம். யாரையும், சட்டத்திற்கு மீறி, சட்டத்திற்குப் புறம்பாக, அதுவும் இயலாதவர்களை, சிறுபான்மை மக்களை இம்சிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்குக் கிஞ்சித்தும் இருக்கிறது என்று சொல்லக்கூடியவர்கள் நாங்கள் அல்ல. ஆனால், அதேநேரத்தில் சூழ்நிலைகளை எல்லாம் மாற்றக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப் பட்டவர்கள், பெரியார் அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள். எனவே,